1980 பிப்ரவரி 5]

திருப்பத்தூர்—சென்னை விரைவுப் பேருந்துப் பணி

* வினா எண். 53—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) வடாற்காடு திருப்பத்தூரிலிருந்து சென்னைக்கு இரவு நேரங்களில் பல்லவன் போக்குவரத்து விரைவு வண்டி விடுவதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இந்தத் திட்டம் எப்போது முதல் செயல் படும் ?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்) :

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ப. சுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் நகரம் பெரிய வியாபார ஸ்தலம். அந்த வியாபாரத்திற்கு வேண்டிய பொருள்களை வாங்குவதற்கு வியாபாரிகள் தினமும் சென்னைக்கு வந்து போக வேண்டிய நிலை இருப்பதால் அங்கேயிருந்து இரவு நேரங்களில் புறப்பட்டு சென்னைக்கு வர விரைவு வண்டி வசதி இல்லாத காரணத்தால்—ரயிலில் வரவேண்டும் என்று நினைத்தாலும் 10 கிலோ மீட்டர் தூரம் போக வேண்டியிருக்கிறது. அப்படிப் போனாலும் அங்கேயும் இடவசதி கிடைப்பது இல்லை—இது குறித்து பரிசீலித்து, அங்கேயிருந்து விரைவு வண்டி விடுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவர் அவர்களே, திருப்பத்தூரில் இருந்து நேரடியாக சென்னைக்கு இரண்டு பேருந்துகள் தினசரி பிற்பகல் 3.55 மணிக்கு ஒன்றும், இரவு 11.24 மணிக்கு ஒன்றும் இருப்பதால் மேற் கொண்டு பேருந்துகள் விட சௌகரியம் இல்லை என்று தெரி வித்துக் கொள்கிறேன்.

திரு. ப. சுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, இரவு 11 மணிக்கு வருகிற வண்டி மேட்டூரிலிருந்து வருகிற காரணத் தால் அந்த வண்டியில் இடம் கிடைப்பது இல்லை. ஆகவே, திருப்பத்தூரிலிருந்து புறப்படுவதற்கு மறுபரிசீலனை செய்யப் படுமா ?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : அரசு மறுபரிசீலனை செய்யும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. தி. அன்பழகன் : தலைவரவர்களே, திருப்பத்தூர் வழியாக வருகின்ற பேருந்துகளில் எங்களைப் போன்ற சட்ட மன்ற உறுப்பினர்கள் கூட ஏற முடியவில்லை. காரணம் அங்கே பஸ்களை நிறுத்தாமல் வந்து விடுகிறார்கள். இந்தக் குறையைப் போக்க, அங்குள்ள மக்கள் வசதியை முன்னிட்டு, புதிதாக அங்கிருந்து பேருந்து விட அரசு ஏற்பாடு செய்யுமா?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களை ஏற்றிக் கொள்ளாமல் செல்கிறார்கள் என்ற புகாரை எழுத்துமூலமாகக் கொடுத்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எம்.ஏ. லத்தீப் : தலைவரவர்களே, திருப்பத்தூரில் இருந்து புறப்படும் பேருந்துகள் அங்கிருந்து நேரடியாக சென்னைக்கு வருவதில்லை. வாணியம்பாடி, ஆம்பூர் வழியாக வருகின்றன. ஆகையால் அந்தப் பகுதிகளில் இருக்கிற மக்களுக்கும் அவர்களுடைய சௌகரியத்தை முன்னிட்டு பஸ்கள் விட்டால் நன்றாக இருக்கும். திருப்பத்தூரிலேயே பஸ் நிறைய பயணிகள் சேர்ந்துவிடுவதால் வாணியம்பாடி, ஆம்பூர், வேலூர் பயணிகள் ஏறுவதற்கு இடமில்லாமல் போய்விடுகிறது. ஆகவே, மேற்கொண்டு புதிய பேருந்துகள் விட ஏற்பாடு செய்யப்படுமா?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவர் அவர்களே, ஏற்கனவே இதே கேள்விக்குப் பதில் அளித்ததைப்போல் இந்தக் கோரிக்கையை அரசு கவனமாகப் பரிசீலிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இரவு நேரப் பேருந்துகளில் கட்டணங்கள்

*வினா எண். 54—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இரவு நேரங்களில் ஓடும் பஸ்களில் அதிகக் கட்டணம் வசூலிக்கப்படுகின்றதா?

(ஆ) ஆம் எனில், அதைக் குறைக்க செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்) :

(அ) ஆம்.

(ஆ) இல்லை.

திரு. து. புருஷோத்தமன் : தலைவரவர்களே, இரவு நேரங்களில் விடுகின்ற பேருந்துகள் சினிமாவுக்குச் சென்று திரும்புகின்றவர்களுக்குத்தான் வசதியாக இருக்கின்றன : தொழிற்